**O.S.84 of 2024**

Date : 16.10.2025

வா.சா.1 : ராகவேந்திரா

<u>வா.சா. 1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>

முதல் விசாரணை வாக்குமூலத்தை நான் படித்து பார்த்துதான் கையொப்பம் போட்டேன். இந்த வழக்கில் என் அப்பாதான் பாலிசி எடுத்துள்ளார் என்றால் சரிதான். Family health Optima வின் கால அவகாசம் 20.01.2021 முதல் 19.01.2022 வரை என்றால் சரிதான். பாலிசி தொகை ரூ.3 லட்சம் என்றால் சரிதான். அதற்கு ஒரு தவணை பிரீமியம் ரூ10,195 ஐ எனது தந்தை செலுத்தியுள்ளார் என்றால் ச ரிதான். மேற்படி பாலிசியை எடுக்கும் போது எனக்கும் எனது தங்கைக்கும் எந்த நோயும் இல்லை என்று தான் தந்தை பாலிசி எடுத்தார் என்றால் சரிதான். பாலிசியில் உள்ள விதிகள் பற்றி படித்துப்பார்துள்ளேனா என்றால் அப்பா படித்துபார்த்துள்ளார். விதி எண்.02f அதன் படி ஒரு பாலிசி எடுத்த உடனேயே விபத்துகள் மட்டும் உடனே உள்ளடங்கும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றாலும் தொடர்ச்சியாக இரண்டு வருடம் பிரீமியம் செலுத்திய பிறகு எற்கெனவே ஏதேனும் நோய் இருந்தால் அதற்கு நான் இழப்பீடு கேட்கமுடியும் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் ஒரு பாஸ்கட் பால் பிளேயர் என்றால் சரிதான். என்னுடைய பிரமான வாக்குமூலத்தில் மூன்றாம் பக்கத்தில் விளையாடும் போது நான் என் இடது காலை ஆழமாக அழுத்தி விளையாடும் போது கால் இடறி கீழே விழுந்து விட்டேன் என்று கூறப்பட்டுள்ளது என்றும் மேலும் எனது சிகிச்சை விடுவிப்பு ஆவணத்தில் என்னுடன் விளையாடிய சகவிளையாட்டு வீரர் இடித்ததினால் காலில் காயம் ஏற்பட்டதாக உள்ளது என்றால் அதில் எது உண்மை என்றால் கால் ஸ்லிப் ஆகி கீழே விழுந்ததால் காயம் ஏற்பட்டது. என்னை மருத்துவபரிசோதனை செய்ததில் Distal FEMUR solitary Excostosis Lt என்ற நோய் உள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு எனக்கு நோய் எதுவும் இல்லை. வா.சா-ஆ.2 ஆவணத்தில் Diagnosis என்பதில் Distal FEMUR solitary Excostosis Lt என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தொடைக்கு கீழ் பகுதியில் முட்டிற்கு மேல் பகுதியில் ஏற்கெனவே இருக்கும் எலும்பை விட அதிகமாக எலும்பு வளர்ந்துள்ளது என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 4 வது பக்கத்தில் மருத்துவ பரிசோதனை அறிக்கையில்

எனக்கு 18 வயது பூர்த்தியானால்தான் சிகிச்சை செய்யமுடியும் என்று மருத்துவர்கள் கூறினார்கள் என்றால் சரிதான். இந்த நோய் ஒரு விபத்தினால் ஏற்பட்டது அல்ல என்றால் சரியல்ல. விபத்தினால்தான் மேற்கண்ட நோய் வந்தது. எனக்கு நோய் இருந்தது ஏற்கெனவே தெரியவில்லை என்றும் விபத்து நடந்த பின்புதான் தெரியவந்தது என்றாலும் அது பற்றி தெரியவில்லை. வா.சா.ஆ-2 ன் படி வாதியின் இழப்பீட்டை நிராகரித்துள்ளதில் 2வது பக்கத்தில் மேற்படி எதுவும் கேள்விகள் இருந்தால் சீனியர் டாக்கடரை திங்கள் முதல் சனி வரை காலை 9 முதல் மாலை 9 மணி வரை எந்த கேள்விகள் வேண்டுமானாலும் கேட்டு தெளிவு பெறலாம் என்று கூறப்பட்டுள்ளதில் நான் மேற்கண்ட மருத்துவரை அழைத்து பேசினேனா என்றால் நான் பேசவில்லை என் அப்பா பேசினாரா என்று எனக்கு தெரியவில்லை. இரண்டாவதாக திருமதி.ராதா விஜயராகவன் Grievance redressal Officer அவர்களை அணுகி அவரிடம் புகார் கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு கொடுக்கலாம் என்பது எனக்கு தெரியாது. மூன்றாவதாக Office of the insurance ombudsman அவர்களை அனுகி தங்களது புகார்களை தெரிவிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது என்றால் அவரை அணுகினோம். அவர் அதை நோய் என்று சொன்னார். எனது சிகிச்சை விடுப்பு ஆவணத்தில் எனக்கு அறுவை சிகிச்சை செய்து எடுத்த எலும்பின் அளவு 10x 7 x 3 cm அதாவது 10 செ.மீட்டர் நீளம் 7 செ.மீட்டர் அகலம் 3 செ.மீட்டர் தடிமன் இருந்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வளவு நீளம் உள்ள எலும்பு விபத்தினால் வளராது என்றும் ஏற்கெனவே நோய் இருந்ததால்தான் அவ்வாறு இருக்கிறது என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு பிறவியிலேயே இருந்த எலும்பு நோயை மறைத்து விபத்தாக சித்தரிக்கிறேன் என்றால் சரியல்ல. மேலும் எனக்கு ஆன செலவு, மெடிக்கல் பில் ரூ.79250, அறுவை சிகிச்சை செய்த பில் ரூ.6550 மற்றும் மருத்துவ பில் ரூ.1950 மற்றும் 12,250 ஆகியவைகள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 24 மாதங்கள் கழித்து எலும்பில் ஏற்படும் அறுவை சிகிச்சை செலவு தொகை தரப்படும் என்றால் சரியல்ல. எனவே நான் தேவையில்லாமல் பிரதிவாதிகள் மீது வழக்கை தாக்கல் செய்ததற்காக பிரதிவாதிகளுக்கு நஷ்ட ஈடு தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம் என்றால் சரியல்ல.